<u>**நீதித்துறை நடுவர் எண்–1, பத்மநாபபுரம்**</u>

**முன்னிலை :- திரு. T.நரேந்திரகுமார், B.A.,LLM., PGDFL.,** (கூ.மு.பொறுப்பு)

**2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் நாள் புதன்கிழமை**

<u>**கொற்றிக்கோடு காவல் நிலையக் குற்ற எண். 54/2024**</u>

in

**M.P.No.3/2025**

**in**

**CC.No.299 of 2024**

| | | |
|---|---|---|
| ஐடா,<br>க/பெ. தங்கம் | | ........................மனுதாரர் |
| டினோ (வயது 21)<br>த/பெ.தங்கம் | | ........... 2–ம் குற்றம் சுமத்தப்பட்டநபர் |
| | //எதிர்// | |
| அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>**கொற்றிக்கோடு** காவல் நிலையம்,<br>**அடைப்புக்காவல் நாள்–16.12.2025** | | ........எதிர்மனுதாரர்/<br>குற்றமுறையிடுபவர் |

இம்மனு **19.12.2025ஆம்** தேதியில் **பொது அதிகாரம் பெற்ற குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தாயாரான திருமதி.ஐடா.,** அவர்கள் ஆஜராகி பிரிவு 480 பாரதிய நாகரிக் சுரக் ஷா சன்கீதான்படி மனு தாக்கல் செய்யப்பட்டு, இம்மனுவை ஆராய்ந்தும், இன்று **31.12.2025** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

<u>**உத்தரவு**</u>

பொது அதிகாரம் பெற்ற குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தாயாரான மனுதாரர் பிரிவு 480 பாரதிய நாகரிக் சுரக் ஷா சன்கீதான்படி பிணைக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இம்மனுவில், **கொற்றிக்கோடு காவல் நிலைய குற்ற எண்.54/2024, ச/பி 379 இதச–வின் கீழ்** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் கடந்த 16.12.2025 –ம் தேதி முதல் நீதிமன்றக்காவலில் இருந்து வருகிறார்.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் மேற்படி நபர் எந்தவொரு விதத்திலும் குற்றவாளி இல்லை என்றும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் வைரல் காய்ச்சரால் பாதிக்கப்பட்டிருந்ததாலும், மஞ்சள் காமாலை நோய்க்காக நாட்டு மருத்து கிசிச்சை பெற்றுக்கொண்டிருந்ததாலும், குறிப்பிடப்பட்ட நாளில் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்றும் இதன்காரணமாக வழக்கறிஞருக்கு தகவல் அளிக்க முடியாமல் போய்விட்டது என்றும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் கடந்த 17.10.2025–ம் தேதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, கொற்றிக்கோடு காவல்நிலையத்தார் குற்றம் சுமத்தப்பட்ட நபரை 16.12.2025–ம் தேதி கைது செய்து இந்நீதிமன்ற காவலில் வைத்துள்ளதாகவும், குற்றம் சுமத்தப்பட்ட நபரை பிணையில் விடுவித்தால் தலைமறைவாக மாட்டார் என்றும் சாட்சிகளை கலைக்க மாட்டார் என்றும் நீதிமன்றம்

விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவார் என்றும், வழக்கு விசாரணைக்காலத்தில் தவறாமல் முன்னிலையாவார் என்றும், குற்றம் சுமத்தப்பட்ட நபரை பிணையில் விட்டால் போதுமான பிணையதாரர்களை சமர்ப்பிப்பார் என்றும் மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*எதிர்மனுதாரர் / குற்றமுறையிடுபவர் தரப்பில்* ***"குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரருக்கு சொந்தமான ரூபாய் 25000/- மதிப்புள்ள இரண்டு மின் மோட்டார் பம்புகளை திருடி சென்றாக புகார் "***

இம்மனு குறித்து எதிர்மனுதாரர் தரப்பு / கற்றறிந்த அரசுத்தரப்பில் வழக்கு புலன் விசாரணையில் இருப்பதாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது கொற்றிக்கோடு காவல் நிலையத்தில் 02/2024 சரித்திரபதிவேடு பராமரிக்கப்பட்டு வருவதாலும், கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் வழக்குகள் நிலுவையில் இருப்பதாலும், வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக சென்றுவிட வாய்ப்பு உள்ளது என்பதாலும், மனுதாரர் இதுபோன்ற குற்ற செயல்கள் செய்யக்கூடும் என்றும் மனுதாரரை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவித்துள்ளனர்.

மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் /குற்றம் சுமத்தப்பட்ட நபர் **16.12.2025-ம்** தேதி முதல் நீதிமன்றக்காவலில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், மேலும் வழக்கு ஆவணங்கள் மற்றும் இச்சம்பவத்தின் சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், நீதியின் நலன் கருதி மனுதாரரை மேலும் நீதிமன்ற காவலில் வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுவதால் கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் மனுதாரருக்கு பிணை விடுவிப்பு கோரிய மனுவானது அனுமதித்து பிணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. மனுதாரர்/ குற்றம் சுமத்தப்பட்ட நபர் **ரூ.10,000/-** த்திற்கான **தலா 2 நபர்** ஜாமீனை இந்நீதிமன்ற உளநிறைவுப்படி (Satisfaction) Rule 14 (4) and Judicial Form No.46 of Criminal Rules of Practice 2019ன்படி நிறைவேற்ற வேண்டும்.

2. **பிணையதாரர்கள்** தங்களுடைய பயன்பாட்டிலுள்ள தொலைபேசி/அலைபேசி எண் மற்றும் தங்களுடைய நிரந்தர, தற்காலிக முகவரியை தெளிவாக இந்நீதிமன்றத்திற்கு எழுத்து மூலமாக தெரியப்படுத்த வேண்டும். பின்னாளில் வேறு முகவரி மாற்றம் செய்திருந்தால் அது பற்றிய விபரத்தை மாற்றம் செய்த **30 நாட்களுக்குள்** இந்நீதிமன்றத்தில் எழுத்து மூலமாக தெரியப்படுத்த வேண்டும்.

3. மனுதாரர்/ குற்றம் சுமத்தப்பட்ட நபர் பிணையில் வந்த பின் தங்களுடைய பயன்பாட்டிலுள்ள தொலைபேசி எண் மற்றும் தங்களுடைய நிரந்தர, தற்காலிக முகவரியை தெளிவாக சம்பந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு எழுத்து மூலமாக தெரியப்படுத்த வேண்டும். பின்னாளில் வேறு முகவரி மாற்றம் செய்திருந்தால் அது பற்றிய விபரத்தை இந்நீதிமன்றத்திற்கும் சம்பந்தப்பட்ட காவல்நிலையத்திற்கும் எழுத்து மூலமாக தெரியப்படுத்த வேண்டும்.

4. மனுதாரர்/ குற்றம் சுமத்தப்பட்ட நபர் சிறையில் இருந்து பிணையில் வெளியில் வந்த மறு நாள் முதல் **இந்நீதிமன்றத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு ஆஜராகி 15 நாட்கள்** கையொப்பம் செய்ய வேண்டும்.

5. மனுதாரர்/ குற்றம் சுமத்தப்பட்ட நபர் வழக்கு விசாரணைக்கு நீதிமன்றம் அழைக்கும்போது அழைப்பாணையின் பேரில் ஆஜராக வேண்டும்.

6. மனுதாரர்/ குற்றம் சுமத்தப்பட்ட நபர் தலைமறைவாகிவிடக்கூடாது என்றும், போலீசார் விசாரணைக்கு அழைப்பாணையின் பேரில் அழைக்கும்போது தவறாமல் ஆஜராகி முழு ஒத்துழைப்பு தர வேண்டும்.

7. மனுதாரர்/ குற்றம் சுமத்தப்பட்ட நபர் எந்த வகையிலும் வழக்கின் சாட்சிகளை கலைக்கவோ, வேறு எந்த வகையிலோ இடையூறு செய்யவோ, குந்தகம் ஏற்படுத்தவோ கூடாது என்றும், மேலும் இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடாது.

8. மனுதாரர்/ குற்றம் சுமத்தப்பட்ட நபர் பாரதிய நாகரிக் சுரக் ஷா சன்கீதா பிரிவு 526 ஐ மீறக்கூடாது

9. மேற்கண்ட பிணை நிபந்தனையை மீறும் பட்சத்தில் பாரதீய நியாய சங்கீதா பிரிவு **269** ன் கீழ் **நடவடிக்கை எடுக்கப்படும், என்ற நிபந்தனைகளின் பேரில் இந்த பிணை விடுவிப்பு செய்யக்கோரும் மனுவானது அனுமதித்து** உத்தரவிடப்படுகிறது.

**(குறிப்பு நிபந்தனை எண் 4 யை மீறும் பட்சத்தில் அதுகுறித்த அறிக்கையை இந்நீதிமன்றத்தில் உடன் சமர்ப்பிக்க சம்மந்தப்பட்ட காவல் நிலைய பொறுப்பு அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.)**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு **(31.12.2025)**ம் தேதி அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

ஒம்/-திரு.T.நரேந்திரகுமார்,B.A., LLM.,PGDFL.
நீதித்துறை நடுவர் எண்-1,
பத்மநாபபுரம் (கூ.மு.பொறுப்பு).

Judicial Magistrate No.I Court,
Padmanabhapuram.(FAC)

Court Seal

"The Parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date.”